# ஆரம்ப நிலையிலேயே தகுந்த திட்டமிடல்

TAMIL | ENGLISH

**தகுந்த நேரத்தில் திட்டமிடுவதற்கும், நிதி மற்றும் சட்டம் சார்ந்த விடயங்களை ஒழுங்கு செய்வதற்கும் உள்ள வழிமுறைகளைப் பற்றியும், இதில் உதவக்கூடியவர்கள், மற்றும் அமைப்புகள் யாவை என்பது பற்றியும் இந்த 'உதவியேடு' தகவல் அளிக்கிறது.**

மறதிக்கோளாளாறு வெவ்வேறு நபர்களை வெவ்வேறு விதங்களில் பாதிக்கிறது. பணத்தைக் கையாளும் திறனையும், செய்யும் வேலைகள் குறித்து சிறந்த முடிவுகளை மேற்கொள்ளும் திறனையும் மறதிக்கோளாறின் ஆரம்ப நிலையிலேயே சிலர் இழந்துவிடக்கூடும், ஆனால், இன்னும் சிலருக்கு இந்தத் திறன்கள் அதிக காலத்திற்கு நீடிக்கக்கூடும்.

இருந்தபோதிலும், விரைவாகவோ அல்லது பின்னொரு காலத்திலோ இத் திறன்கள் குறைந்துகொண்டே வந்து மறதிக்கோளாறு உள்ளவர்களால் தமது பண விவகாரங்கள் மற்றும் சட்ட விவகாரங்கள் குறித்து தாமே சொந்தமாக முடிவெடுக்க இயலாது.

## முன்னதாகவே திட்டமிடல்

துவக்க நிலையிலேயே என்ன செய்வது என்று திட்டமிடுவதன் மூலம் மறதிக்கோளாறு உள்ள ஒருவரது விடயங்களைக் கவனித்துக்கொள்வது அவரது குடும்பத்தினருக்கும் அவரது கவனிப்பாளர்களுக்கும் எளிதாக அமையும். முன்னதாகவே, அதாவது துவக்க நிலையிலேயே திட்டமிடும் பொழுது மறதிக்கோளாறு உள்ளவராலும் திட்டமிடும் கலந்துரையாடலில் கலந்துகொண்டு தமது விருப்பங்கள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்ய இயலும்.

இயலும் தருணங்களில், மறதிக்கோளாறு உள்ளவரால் ஆலோசனைகளில் பங்கு கொள்ள இயலும் பொழுதும், ஆவணங்கள் எதிலும் கையொப்பமிட சட்டப்படி அவரால் இயலும் பொழுதும் அவரது அறிவுரையை நாடுங்கள்.

## பண விவகாரங்கள்

வங்கிக் கணக்கு இரண்டு நபர்களது பெயரில் இருந்தால், எவ்வித மாற்று ஏற்பாடுகளும் இல்லாமல் மறதிக்கோளாறு உள்ளவரது வாழ்க்கைத்துணைவரே வங்கிக் கணக்கை இயக்கி வரலாம். இருப்பினும், மறதிக்கோளாறு உள்ளவர் கணக்கைத் தவறாகப் பயன்படுத்தினாலோ, அல்லது வங்கிக் கணக்கு அவர் பெயரில் மட்டும் இருந்தாலோ பிரச்சினைகள் எழக்கூடும். எனவே, மறதிக்கோளாறு உள்ளவர் சட்டப்படி தகுந்த மனநிலையில் இருக்கும்பொழுதே இந்தக் கணக்குகளைக் கவனித்துக் கொள்வதற்கான அதிகாரத்தை இன்னொருவருக்குக் கொடுப்பதன் மூலம் இந்தக் கஷ்டங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். மறதிக்கோளாறு உள்ளவர் சட்டப்படி தக்க மனநிலையில் இல்லாதபோது இந்த அதிகாரம் ஏற்படுத்தப்பட்டால் இது செல்லுபடியாகாது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். மாற்றங்கள் எதையும் ஏற்படுத்த மறதிக்கோளாறு உள்ளவர் சம்மதிக்கவில்லை என்றால், பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காண்பது என்று வங்கி மேலாளருடன் கலந்து கதைக்கலாம்.

**முன்னரே திட்டமிடுவதென்பது கீழ் வருவனவற்றைக் குறிக்கும்:**

- பண விவகாரம் சம்பந்தப்பட்ட அனைத்துக் கணக்குகளிலும் இரண்டு நபர்களுடைய கையொப்பங்களையும் பெறுவது
- நிதிவிவகார ஆலோசகர் ஒருவரது உதவியுடன் எதிர்கால பண விடயங்கள் குறித்து கலந்துரையாடுவது
- மறதிக்கோளாறு உள்ளவர் தனது பணத்தை எப்படி, எப்போது பெறுவார் என்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்

**யாரால் உதவ இயலும்?**

- வங்கி மேலாளர்
- அங்கீகாரம் பெற்ற நிதிவிவகார ஆலோசகர்
- சட்டதரணி
- 'அல்ஸைமர் ஆஸ்திரேலியா' அமைப்பு

## இன்னொருவர் சார்பாய்ச் செயல்படுவதற்கான 'நீடித்த சட்டபூர்வ அதிகாரம்' (Enduring Power of Attorney)

அவுஸ்திரேலியாவின் பெரும்பான்மையான மாநிலங்கள் மற்றும் எல்லைப்பகுதிகளில், 'நீடிக்கும் பவர் ஆ.്.ப் அட்டர்ணி' என்று அழைக்கப்படும் 'நீடிக்கும் செயல்பாட்டு அதிகாரப் பத்திரம்' ஒன்றில் ஒருவர் சட்டப்படி தெளிவான மன நிலையில் இருக்கும்போது அவர் கையொப்பமிடலாம். கையொப்பம் இட்டவரால் செயல்பட இயலாதபோது, இந்த அதிகாரப் பத்திரத்தில் பெயர் சொல்லப்பட்டுள்ள நபர் கையொப்பமிட்டவர் சார்பாக அவரது நிதி விவகாரங்களில் செயல்படுவதற்கான சட்டபூர்வ ஏற்பாடாகும் இது. எந்த விதமான நோய்நிலையும் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இப்படிப்பட்ட 'நீடிக்கும் பவர் ஆ.்.ப் அட்டர்ணி'க்கு பலர் ஏற்பாடு செய்துள்ளனர்.

சாதாரணமான, பொதுவான 'பவர் ஆ.்.ப் அட்டர்ணி' (செயல்பாட்டு அதிகாரம்) ஒன்றையும் ஏற்பாடு செய்துகொள்ளலாம், ஆனால் இது ஒருவர் சட்டப்படி செயல்படும் நிலையில் இருக்கும்போது மட்டுமே செல்லுபடியாகும். 'நீடிக்கும் செயல்பாட்டு அதிகாரம்' என்பது, மீளப் பெறப்பட்டாலொழிய, ஒருவர் இறக்கும் வரையிலும் நீடிக்கும்.

மறதிக்கோளாறு உள்ளவர்களால் சட்டம் மற்றும் பணம் சம்பந்தப்பட்ட விடயங்களில் தானே செயல்பட இயலாமல் போகும்பொழுது, இவ்விடயங்களில் தன் சார்பாக இன்னொருவர் செயல்பட 'நீடிக்கும் செயல்பாட்டு அதிகாரம்' (enduring power of attorney) வகை செய்கிறதென்பது இதன் பயன்களில் ஒன்றாகும்.

**முன்னரே திட்டமிடுவதென்பது கீழ் வரும் விடயங்களைக் குறிக்கும்:**

- மறதிக்கோளாறு உள்ளவர் ஏற்கனவே ' நீடிக்கும் பவர் ஆ.்.ப் அட்டர்ணி'க்கு ஏற்பாடு செய்திருக்கவில்லை என்றால், மறதிக்கோளாறு இருப்பது கண்டுபிடிக்கப்பட்ட உடனே அவர் இயலும் பொழுதே இந்த ஏற்பாட்டைச் செய்வது குறித்து யோசிக்க அவருக்கு நேரம் இருக்க வேண்டும்.
- மறதிக்கோளாறால் பாதிக்கப்பட்டுள்ளவரது குடும்பத்தினர் மற்றும் கவனிப்பாளர்கள் ஆகியோருக்கும் இயலாத நிலை ஏற்பட்டுவிட்டால், விடயங்கள் நல்ல முறையில் நிர்வாகிக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் அவர்களும் தமது சொந்த 'நீடிக்கும் பவர் ஆ.்.ப் அட்டர்ணி'க்கு ஏற்பாடு செய்துகொள்ள வெண்டும்.
- 'நீடிக்கும் பவர் ஆ.்.ப் அட்டர்ணி'யின் பிரதி ஒன்றை இவர்கள் வைத்திருக்க வேண்டும் மற்றும் அது எங்கு வைக்கப்பட்டிருக்கிறது என்பது இவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.



இந்தத் தகவலேடு அவுஸ்திரேலிய அரசின் நிதியுதவியைப் பெறுகிறது.

**யாரால் உதவ இயலும்?**

- சட்டதரணி
- சட்ட அமைப்புகள் அல்லது சட்ட உதவி அமைப்பு (The Law Society or Institute, or Legal Aid)
- அரச சட்டதரணி, அரச பாதுகாவலர் (The Public Advocate or Public Guardian)
- 'அல்ஸைமர் ஆஸ்திரேலியா' (Alzheimer's Australia)

## உயில்கள்

இறந்துவிட்ட ஒருவரது சொத்து எப்படிப் பிரிக்கப்படவேண்டும் என்பது குறித்த உத்தரவுகள் ஒரு உயிலில் இருக்கும்.

உயிலில் சொல்லப்படும் விடயங்களின் தன்மைகள் மற்றும் விளைவுகளை ஒருவர் புரிந்துகொண்டிருந்தால் மட்டுமே உயில் சட்டப்படி செல்லும், எனவே மறதிநோய் உள்ள ஒருவர் உயில் ஒன்றை எழுதவோ அல்லது உயிலில் மாற்றங்களை ஏற்படுத்தவோ விரும்பினால், உயிலில் கையெழுத்து இடுவதற்கான தகுதி அவருக்கு இருக்கும்பொழுதே இதைச் செய்துவிட வேண்டும்.

முன்னதாகவே திட்டமிடல் என்பது கீழ் வருவனவற்றைக் குறிக்கும்:

- உயிருள்ள, மற்றும் புதிதுபடுத்தப்பட்ட உயில்
- உயிலை செயல்படுத்துபவர் யார் என்பதும், உயில் எங்கு வைக்கப்பட்டிருக்கிறது என்பதும் தெரிந்திருக்க வேண்டும்.

**யாரால் உதவ முடியும்?**

- சட்டதரணி
- சட்ட அமைப்புகள் அல்லது சட்ட உதவி அமைப்பு (The Law Society or Institute, or Legal Aid)
- 'அல்ஸைமர் ஆஸ்திரேலியா' (Alzheimer's Australia)

## மருத்துவ சிகிச்சை குறித்த முடிவுகள்

மறதிநோய் உள்ளவரால் தனது சிகிச்சை குறித்த முடிவுகளை மேற்கொள்ள இயலவில்லை என்றால், அவர்களுக்காக இந்த முடிவுகளை இன்னொருவர் மேற்கொள்ள வேண்டியிருக்கும். அவுஸ்திரேலியாவின் பெரும்பான்மையான மாநிலங்கள் அல்லது எல்லைப் பகுதிகளில் நம்பிக்கைக்குரிய நணபர் அல்து உறவினர் ஒருவரை இந்த முடிவுகளை மேற்கொள்வதற்கென நியமிக்க இயலும். இந்த ஏற்பாடு ஏற்கனவே செய்யப்பட்டிருக்கவில்லை என்றால், மறதிக்கோளாறு உள்ளவர் சார்பாக முடிவுகளை மேற்கொள்வதற்கென ஒருவரை நியமிக்க குறிப்பிட்ட நீதிமன்றம் ஒன்றிற்கு ஒவ்வொரு மாநிலமும், எல்லைப்பகுதியும் அனுமதியளிக்கும்.

**மருத்துவ சிகிச்சை குறித்த முடிவுகள் குறித்து முன்னதாகவே திட்டமிட உதவும் இரு வசதிகள் உள்ளன:**

- மருத்துவ விடயங்களை உள்ளடக்கிய 'நீடிக்கும் பவர் ஆ.'.ப் அட்டர்னி' ஒன்று. மருத்துவ முடிவுகளை மேற்கொள்ள தமது சார்பாக இன்னொருவரை நியமிக்க மறதிக்கோளாறு உள்ளவருக்கு இது ஏது செய்கிறது.
- முன்னதாகவே ஏற்படுத்தப்படும் உத்தரவு ஒன்று. மருத்துவ சிகிச்சை குறித்து மறதிநோய் உள்ளவரது விருப்பங்களைத் தெரிவிக்கும் எழுத்து மூலமான ஆவணமாகும் இது.

வெவ்வேறு மாநிலங்களிலும், எல்லைப்பகுதிகளிலும் இந்த ஆவணத்தின் பெயர் வெவ்வெறாக இருக்கலாம், ஆனால் இதன் செயல்பாடு பெரும்பாலும் ஒரே மாதிரியாகவே இருக்கும்.

**முன்னதாகவே திட்டமிடுவதென்றால்:**

- உடல்நலம் சம்பந்தப்பட்ட விடயங்களை உள்ளடக்கிய 'நீடிக்கும் செலாற்று அதிகாரம்' ஒன்றையோ அல்லது 'முன்னெச்சரிக்கை உத்தரவு' (advance directive) ஒன்றையோ மறதிக்கோளாறு உள்ளவர் ஏற்படுத்த அவருக்கு வாய்ப்பளித்து இதை உறுதி செய்ய வேண்டும்.
- இந்த ஆவணத்தின் பிரதி ஒன்றை வைத்திருக்க வேண்டும், மற்றும் அது எங்கிருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டிருக்க வேண்டும்.

**யாரால் உதவ முடியும்?**

- சட்டதரணி
- சட்ட அமைப்புகள் அல்லது சட்ட உதவி அமைப்பு (The Law Society or Institute, or Legal Aid)
- பொது வழக்கறிஞர் அல்லது பொதுநலக் காவலர் (The Public Advocate or Public Guardian)
- 'அல்ஸைமர் ஆஸ்திரேலியா' (Alzheimer's Australia)

## பாதுகாவலராய்ப் பணியாற்றலும் நிர்வாகமும் (Guardianship and Administration)

தாமாகவே முடிவுகளை மேற்கொள்ள இயலாத ஒருவருக்காக பாதுகாவலர் ஒருவரையோ அல்லது நிர்வாகி ஒருவரையோ நியமிக்கவல்ல 'பாதுகாவல் அமைப்பு' (Guardianship Board) அல்லது 'முறைமன்றம்' (Tribunal) ஒன்று பெரும்பான்மையான மாநிலங்கள் மற்றம் எல்லைப்பகுதிகளில் உள்ளது. மறதிநோய் உள்ளவரது விடயங்களைக் கவனித்துக்கொள்வதில் பிரச்சினைகள் எழுந்தாலோ, அல்லது அவரது நலன் குறித்த முரண்பாடுகள் இருந்தாலோ, பாதுகாவலர் அல்லது நிர்வாகி ஒருவரை நியமிப்பதற்கான விண்ணப்பம் ஒன்றைக் கருத்தில் கொள்ள வேண்டிய தேவை ஏற்படக்கூடும்.

பாதுகாவலர் அல்லது நிர்வாகி ஒருவரை நியமிப்பதற்காகச் செய்யப்படும் விண்ணப்பத்திற்கான தேவை எழுமா என்பது குறித்தும், இதை எப்படிச் செய்வது என்பது குறித்தும் கலந்தாலோசிக்க 'அல்ஸைமர் ஆஸ்திரேலியா'(Alzheimer's Australia)வுடன் தொடர்பு கொள்ளலாம்.

## மேலதிகத் தகவல்கள்

அல்ஸைமர் ஆஸ்திரேலியா எனும் அமைப்பினர் இதற்கான உதவி, இது குறித்த தகவல்கள், கல்வியறிவு மற்றும் அறிவுரை-ஆலோசனைகளை வழங்குகின்றனர். **1800 100 500** எனும் இலக்கத்தில் 'தேசிய மறதிநோய் உதவி தொலைபேசி இணைப்'புடன் தொடர்பு கொள்ளுங்கள், அல்லது **fightdementia.org.au** எனும் எமது வலைத்தளத்திற்கு விசயம் செய்யுங்கள்.

Interpreter

மொழி உதவிக்கு **131 450** எனும் இலக்கத்தில் 'தொலைபேசி மொழிபெயர்ப்பாளர் சேவை'யை அழையுங்கள்.

இதில் சொல்லப்பட்டுள்ள விடயத்தைப் பற்றிய பொதுவான சாராம்சத்தை மட்டுமே இந்த வெளியீடு அளிக்கிறது. தமது சொந்த விடயங்கள் குறித்து தொழிலமை சார்ந்த அறிவுரையை அனைவரும் நாடல் நலம். இந்த வெளியீட்டில் உள்ள பிழை அல்லது இதில் விடுபட்டுப்போன விடயங்கள் எதற்கும் 'அல்ஸைமர் ஆஸ்திரேலியா' பொறுப்பேற்காது.

translation standards

© Alzheimer's Australia 1999
மீள்பார்வை: 2017

# EARLY PLANNING

**This Help Sheet discusses ways to plan ahead and organise financial and legal affairs and lists people and organisations that can help.**

Dementia affects people differently. One person may begin to lose the ability to handle money or make competent business decisions at an early stage, while another person may keep these skills much longer.

However, sooner or later their abilities will decline and the person with dementia will be unable to make their own decisions about their financial and legal matters.

## Planning ahead

Planning ahead can make it easier for families and carers to manage the affairs of a person with dementia. It may also mean that the person with dementia can participate in the planning and make sure that their wishes are carried out in the way that they would like.

Wherever possible, get advice while the person with dementia can still participate in the discussion and is legally competent to sign any documents.

## Money matters

If a bank account is in joint names, the partner of the person with dementia can continue to operate it without any change in arrangements. However problems can occur if the person with dementia uses the account inappropriately or has accounts in their name only. To avoid these difficulties the person with dementia can give authority, while legally competent, for another person to operate the account. It is important to remember that this authority will be invalid if completed when the person is no longer legally competent. If they are unwilling to agree to a change of arrangement it may be helpful to consult the bank manager about a possible solution.

**Planning ahead means:**

- Having joint signatures on all financial accounts
- Discussing future financial affairs with a financial adviser
- Arranging how and when the person with dementia will access their finances

**Who can help?**

- Bank manager
- Accredited financial adviser
- Solicitor
- Alzheimer's Australia

## Enduring Power of Attorney

In most States and Territories a person can sign a document called an enduring power of attorney if they are legally competent at the time of signing. An enduring power of attorney is a legal arrangement that enables a nominated person to look after the financial affairs of another person should they become unable to do so. Many people have enduring powers of attorney regardless of any illness or diagnosis.

An ordinary, or general, power of attorney is also available but is only valid while a person is legally competent. An enduring power of attorney continues until the person's death, unless revoked.

One of the benefits of having an enduring power of attorney is that it allows the person with dementia to choose someone to act on their behalf in legal and financial matters when they are no longer able to do so themselves.

**Planning ahead means:**

- Ensuring that the person with dementia has the opportunity to consider making an enduring power of attorney if they don't already have one, as soon as possible after diagnosis and whilst they have the capacity to do so
- Ensuring that family and carers also have their own enduring powers of attorney to ensure that their affairs are well managed in case they also become incapable
- Having a copy of the enduring power of attorney, and knowing where it is kept



UNDERSTAND ALZHEIMER'S
EDUCATE AUSTRALIA

This help sheet is funded by the Australian Government

### Who can help?

- Solicitor
- The Law Society or Institute, or Legal Aid
- The Public Advocate or Public Guardian
- Alzheimer's Australia

## Wills

A will gives instructions as to how the estate of a deceased person should be distributed.

A will is only legal if the person understands its implications, so it is essential that if the person with dementia wishes to make, or update their will, they do so while they are still competent to sign.

Planning ahead means:

- Having an up-to-date will
- Knowing who the executor is, and where the will is kept

### Who can help?

- Solicitor
- The Law Society or Institute, or Legal Aid
- Alzheimer's Australia

## Decisions about medical treatment

If a person with dementia loses the legal capacity to make decisions about their medical treatment, someone else needs to make those decisions for them. In most States and Territories a trusted relative or friend can be appointed to make these decisions. If this has not been put in place, the law in every State and Territory allows a particular court to appoint someone to make decisions on behalf of the person with dementia.

**Two types of tools are available to help plan ahead for decisions about medical treatment:**

- An enduring power of attorney covering health matters. This allows the person with dementia to appoint a person to be a substitute decision-maker for medical decisions
- An advance directive. This is a written document expressing the wishes of the person with dementia about medical treatment

Different names may be used in some States and Territories, but the function of the document is much the same.

**Planning ahead means:**

- Ensuring the person with dementia has the opportunity to make an enduring power of attorney covering health matters or an advance directive
- Having a copy of the document, and knowing where it is kept

### Who can help?

- Solicitor
- The Law Society or Institute, or Legal Aid
- The Public Advocate or Public Guardian
- Alzheimer's Australia

## Guardianship and Administration

In most States and Territories there is a Guardianship Board or Tribunal that can appoint a guardian or administrator for a person who is no longer able to make decisions for themselves. If there are problems dealing with the affairs of the person with dementia, or there is conflict about the person's best interests, an application for the appointment of a guardian or administrator may need to be considered.

Alzheimer's Australia can be contacted to discuss whether an application to appoint a guardian or administrator may be needed, and how to go about it.

## FURTHER INFORMATION

Alzheimer's Australia offers support, information, education and counselling. Contact the National Dementia Helpline on **1800 100 500**, or visit our website at **fightdementia.org.au**

Interpreter

For language assistance phone the Translating and Interpreting Service on **131 450**

This publication provides a general summary only of the subject matter covered. People should seek professional advice about their specific case. Alzheimer's Australia is not liable for any error or omission in this publication.

© Alzheimer's Australia 1999
Reviewed 2017